

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்று அறிக்கை

கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம்

மாளிகாவத்தை,
கொழும்பு – 10

செலவினத் தலைப்பு : - 290

உள்ளடக்கம்	பக்க இல.
1. நிறுவன சுயவிபரம்	2-5
2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	6-12
3. 2021 திசம்பர் 31இன் இறுதி வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை	13-20
4. செயலாற்றுகையின் குறிகாட்டி	21-24
5. உறுதியான அபிவிருத்தியின் நோக்கம் (SDG) நிறைவேற்றிய செயலாற்றுகை உள்ளடக்கம்	25-26
6. மனித வள சுயவிபரம்	27-30
7. இணக்க அறிக்கை	31-37

01ஆம் அத்தியாயம்
நிறுவனத்தின் சுயவிபரம்

1.1 அறிமுகம்

கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பிரதான பொறுப்புகளாக 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு கடற்றொழில் படகு) ஒழுங்குவிதிகள், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல், தற்போதைய நிலை மற்றும் சர்வதேச சமுத்திர சட்டம், பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் மற்றும் புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல் போன்றவை அடங்குகின்றன.

இவ்வாறு கடற்றொழில் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தல், அறுவடையின் பின்னரான பாதிப்புகளை குறைப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தல், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்வுக்கான மீன் உற்பத்திகளின் நிலை மற்றும் குணப் பண்புகளைப் பாதுகாப்பதற்கான வசதிகளை மேம்படுத்தல், மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு, மீனவர்கள் மற்றும் மீனவ பெண்களை ஊக்குவிப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

1.2. நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கம்

1.2.1. தொலை நோக்கு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நிலைபேறான தன்மையைப் பேணி, மீனவ சமூகத்தினரின் சமூகப் பொருளாதார நிலையை வலுவூட்டுவதன் ஊடாக தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு வழங்கல்

1.2.2 பணிக்கூற்று

கடற்றொழில் கைத்தொழிலின் நிலைபேறான அபிவிருத்தியின் ஊடாக இலங்கை பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்குவதற்கு, தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக நவீன தொழில்நுட்ப வழிமுறையைக் கடைப்பிடித்தல் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

1.2.3நோக்கம்

- உள்ளூர் மற்றும் சர்வதேச கடல்சார் சட்டங்கள் மற்றும் மரபுகளுக்கு ஏற்ப கடற்றொழில் நடவடிக்கை முகாமைத்துவம், ஒழுங்குமுறைப்படுத்தல், பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி.
- மீன்பிடித் துறையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச கடல்களில் மீன் வளங்களை அறுவடை செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- மீனவ சமூகத்தினரின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- அறுவடைக்கு பிந்திய பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் உள்ளூர் மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- சர்வதேச மரபுகள் மற்றும் பிராந்திய மரபுகளுக்கு ஏற்ப மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.
- துறைமுக அரச நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நியதிக் கோவைக்கு ஏற்ப துறைமுக சேவைகளை செயல்படுத்துதல் செயல்பாட்டை உறுதிப்படுத்தல்.
- ஆழ்கடலில் மீன்பிடி படகுகளின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீனவ சமூகம் மற்றும் பிற வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நிலையில் உகந்த சேவையை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிகழ்நிலையில் கடற்றொழில் துறை தொடர்பான தகவல்களைத் தாமதமின்றியும் தெளிவாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

1.3. பிரதான செயற்பாடுகள்

- கடற்றொழில் செயல்பாட்டு விதிமுறைகளை விதித்தல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- கடற்றொழில் முகாமைத்துவ விதிமுறைகளை உருவாக்குதல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- நீர்வாழ் உயிரின முகாமைத்துவ நியதிகள் தயாரித்தல்,ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும்செயல்படுத்துதல்.
- மீன்பிடி படகுகளின் பதிவு, அடகு வைப்பு மற்றும் மீன்பிடி உரிமை பத்திரம் போன்றவற்றை வழங்குதல்.
- நேரடியாக மீன்களை ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குதல்.
- வெளிநாட்டு மீன்பிடி படகுகளுக்கு மீன்களைத் தரையிறக்குவதற்கான அனுமதி வழங்குதல்.
- கடற்றொழில் முகாமைத்துவம் குறித்த மீனவ சமூகத்தினரின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
- மூலதனப் பொருட்களைப் பெறுவதற்கு நிறுவன கடன் வசதிகளை ஒருங்கிணைத்தல்.
- மீன்பிடி படகுகள் உற்பத்தி நிறுவனங்களின் பதிவை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்வள உள்ளீட்டு வழங்குநர்களின் பதிவை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- மீனவ கூட்டுறவு சங்கங்களை திறமையான நிலைக்கு கொண்டு வருவதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.
- தேசிய மீனவ சம்மேளனத்தின் கீழ் நிறுவப்பட்ட கிராமிய மீனவ அமைப்புகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மீன்பிடித்தொழில் தொடர்பான தரவு சேகரித்தல்.
- வெளிநாடுகளில் எல்லைதாண்டி கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை திருப்பி கொண்டு வருதல்.
- கடலில் அனாதரவாக சிக்கித் தவிக்கும் மீனவர்கள் மற்றும் படகுகளை இலங்கைக்கு மீட்டுக் கொண்டு வருதல்.
- ஏற்றுமதி செய்யப்படும ் மீன்களின்தரத்தை பரிசோதனைக்கு உட்படுத்தல்.
- உள்ளூர் நுகர்வுக்கான மீன் விற்பனை சந்தைகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் இணையும் பல்தின படகுகளுக்கு படகு கண்காணிப்பு கருவிகளை நிறுவுதல்.
- மீன்பிடி படகுகளுக்கும் தரைக்கும் இடையிலான வானொலி தொடர்பு வசதிகளை வழங்குதல்.
- அயல்நாட்டு எல்லையைத் தாண்டிய மீன்பிடி படகுகள் சம்பந்தமாக குறித்த அறிக்கைகளைப் பெறுதல்.
- தினசரி வானிலை அறிக்கைகள் மற்றும் பாதகமான வானிலை முன்னறிவிப்புகளை நாளாந்த அடிப்படையில் வழங்குதல்.
- படகு கண்காணிப்பு அமைப்பு வழங்கும் தகவல்களின் அடிப்படையில் கப்பல்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

- சட்டவிரோமான வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவித்தல்.
- மீன்பிடி படகுகளின் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கான உரிமங்கள் மற்றும் அழைப்பு சமிக்ஞைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- மீனவர்கள் மற்றும் படகுகள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் ஏற்படும்போது காப்பீட்டுக்கான தகவல்களை உறுதிப்படுத்தல்.
- சர்வதேச கடலில் செயலிழந்து அநாதரவாக தத்தளிக்கும் கப்பல்களை மீட்பது.
- மீனவ குடும்ப உறுப்பினர்களின் தொழிற் கல்விக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.
- மீனவர் காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மீனவர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
- கடனீரேரி அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மீனவ கிராமங்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- மீனவப் பெண்களுக்கான மாற்று வருமான திட்டங்கள் செயற்படுத்தல்.

1.4. நிறுவன கட்டமைப்பு

கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம், பணிப்பாளர் நாயகத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளை முறையாக, வினைத் திறனுடன் முன்னெடுத்து செல்வதற்கு மேலதிக பணிப்பாளர் நாயகம் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். திணைக்களத்தின் செயற்பாடுகளை திட்டமிடுதல் செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் 09 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவையாவன -

1. கடற்றொழில் முகாமைத்துவப் பிரிவு
2. கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவு
3. கடற்றொழில் உற்பத்தி தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு
4. கடற்றொழில் செயற்பாட்டுப் பிரிவு
5. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு
6. தகவல் தொழில்நுட்ப பிரிவு
7. நிர்வாகப் பிரிவு.
8. கணக்குப் பிரிவு.
9. உள்ளக கணக்காய்வுப் பிரிவு.

இப்பிரிவுகளின் செயற்பாடுகள் ஏழு (07) பணிப்பாளர்கள், பிரதம கணக்காளர் மற்றும் தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர்களினால் வழிநடத்தப்படுகின்றன.

தீவின் கடலோர மாவட்டங்களை உள்ளடக்கியவாறு பதினைந்து மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளர்கள் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்தின் நடவடிக்கைகளும் மாவட்ட கடற்றொழில் பிரதி/ உதவி பணிப்பாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டங்களில் கடலோரப் பிரதேசங்களை உள்ளடக்கியவாறு 148 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு கடற்றொழில் பரிசோதகர் அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகங்களிலும் கடற்றொழில் பரிசோதகர், மீனவ சமூக அபிவிருத்தி உதவியாளர், கடற்றொழில் வளங்கள் உதவியாளர், அபிவிருத்தி அலுவலர் மற்றும் கடற்றொழில் அலுவலர் ஆகியோர்களினால் இந்த கடற்றொழில் பரிசோதகர் அலுவலகங்களின் மூலம் சகல கடற்றொழில் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், மீன்பிடித் துறைமுகங்கள் சார்ந்து 20 பிரதேச தேடுதல் மற்றும் மீட்பு செயல்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன, அத்துடன் வானொலி தொடர்பு மையங்களில் இரவு பகலாக வானொலி அதிகாரிகள் சேவையாற்றி வருகின்றனர். இந்த பிரதேசங்கள் தேடுதல் செயல்பாட்டு மையங்களின் மூலம் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீன்பிடிக் கப்பல்களுக்கும் தரைக்கும் இடையில் 24 மணி நேரமும் வானொலி தொடர்பு இணைப்பைப் பராமரித்து வருகின்றது. இதன் மூலம் படகுகளுக்கு வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் அவசர எச்சரிக்கைகளையும், படகு உரிமையாளர்களின் செய்திகளையும் மீனவர்களின் செய்திகளையும் பரிமாறப்படுகின்றது. மேலும் மீன்பிடி படகுகளிருந்து பெறப்பட்ட அவசர செய்திகளுக்கு அந்த நேரத்தில் இருந்து அப்பணிகள் முடியும்வரை தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் உள்ள தேடுதல் செயல்பாட்டு அலகினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

மேலும், 07 மாவட்டங்களிலும் 15 மீன்பிடித் துறைமுகங்களில் துறைமுக அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, மீன் அறுவடை ஆய்வு, ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய மீன்கள் பற்றிய அறிக்கை தயாரித்தல், சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் முறைசாரா மீன்பிடி நடவடிக்கைகள் குறித்த பதிவுகளை வெளியிடுதல், பதிவுகள் மேற்கொள்ளல் அத்துடன் தொலை நகல்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் மற்றும் மாற்று ஆய்வு அறிக்கை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

02ஆம் அத்தியாயம் -
முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

2.1 விசேட சாதனைகள்

1. படகு கண்காணிப்பு உபகரணம் தொடர்பான சட்டத்துக்கு அமைவாக 2021ஆம் வருடத்துக்குள்

- படகு வெளியேறுவதை இரத்து செய்தல் (Departure Cancel - 136
- சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வைத்தல் - 28

2. 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து திசம்பர் வரை 14 (அ) மற்றும் 14(ஈ) பிரிவை மீறியமை சம்பந்தமான விபரம் -

மேற்கொள்ளப் பட்ட தவறுகள்	ஆரம்பிக் கப்பட்ட விசார ணைகளி ன்எண்ணி க்கை	நிறைவு செய்யப்பட்ட விசாரணைக ளின் எண்ணிக்கை	நிறைவு செய்யப்படாத விசாரணைக ளின் எண்ணிக்கை	நீதி மன்றத்தில் தொடுக்கப் பட்ட வழக்கு களின் எண்ணிக்கை	நிர்வாக சபைக்கு/ சமரசத்துக்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை	தண்டப் பணம் செலுத்தல் (ரூபா)
வேறு நாடுகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடல்	33	33	-	13	22	126,66666.00
அனுமதிப் பத்திரம் இன்றி கடற்றொழில் நடவடிக்கில் ஈடுபடல்	21	21	21	21	21	7,500,000.00
தரவு குறிப்பேடு (லொக புக்) அபராதம் சம்பந்தமாக	-	-	-	01	-	25,000.00

3. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 02 நியதிகள் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- 2019இன் படகோட்டிக்கு (தேசிய கடற்றொழில் படகு) தரச் சான்றிதழ் வழங்கும் ஒழுங்குவிதிகள்.
- 2017இன் மீன் மற்றும் மீன் உற்பத்தியை ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் மீள் ஏற்றுமதி செய்யும் ஒழுங்குவிதிகள் (திருத்தம்)

4. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தை திருத்தம் செய்யும் சுருக்கக் குறிப்பு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தை திருத்துதல்.
- 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் திருத்தும் மீன்பிடிப்பதற்கான இழுவை நிலத்தை இனம் காணல்.

5. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகளின் 04 சுருக்கக் குறிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 1996ஆம் ஆண்டின் கரைவலை ஒழுங்குவிதிகள் திருத்தம் செய்தல். (கலமெட்டிய கடற்றொழில் துறைமுகம் சம்பந்தமாக)
- நீல நீந்தும் நண்டு சம்பந்தமாக கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள்.
- 2021இன் இலங்கை நீர்ப்பரப்பில் செவுள் வலை பயன்படுத்தி மீன்பிடிக்கும் ஒழுங்குவிதிகள்.
- செயற்கை அடித்தள பவளப்பாறைகள் இனம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள். 1730/14ஆம் இலக்க 2011.11.02ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி.

6. அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகள்

- 2017இன் மீன் மற்றும் மீன் உற்பத்தி ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதை முகாமைத்துவப்படுத்தும் ஒழுங்குவிதிகள்.
- கடற்றொழில் கட்டணம் (அறவிடும் ஒழுங்குவிதிகள்) – 2021
- நந்திக் கடல் கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- பாணகல கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- பாணம கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- லங்கா பட்டுன – உல்லகாலி (இலங்கைத்துறை முகத்துவாரம்) முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- வளையிகடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- நாயாறு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.
- நாசிவன்தீவு கடனீரேரி மீன்பிடி முகாமைத்துவ பிரதேசமாக பிரகடனப்படுத்தும் கட்டளை.

7. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தை திருத்தம் செய்யும் 05 சுருக்கக் குறிப்புகள் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- பொழுதுபோக்கு நடவடிக்கை சம்பந்தமாக மீன்பிடிக் கைத்தொழிலை முகாமைத்துவப்படுத்தும் ஒழுங்குவிதிகள்.
- கடற்றொழில் படகு பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகள் - 1980 (திருத்தம்)
- மீனவர் அடையாள அட்டை வழங்கும் ஒழுங்குவிதிகள் 2021
- பொறிமுறை கடற்றொழில் படகுகள் புறப்படுதல் மற்றும் வருதல் ஒழுங்குவிதிகள்.
- இலங்கை நீர்ப்பரப்பில் மற்றும் ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழில் படகு கண்காணிக்கும் செய்மதி தரவின் மூலம் மற்றும் பிற இலத்திரனியல் பாகங்கள் மூலம் கண்காணிக்கும் தொகுதி (VMS) செயற்படும் ஒழுங்குவிதிகள் - 2015 (திருத்தம்)

8. சுருக்கக் குறிப்பு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.

- 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தை திருத்துதல், சட்டவிரோதமான நடவடிக்கை சம்பந்தமாக மற்றும் அது பற்றிய விதிமுறைகள் உள்ளடக்கல் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகளின் செயற்பாட்டின் அதிகாரத்துக்கு எதிரான நடவடிக்கைக்குள்ள தண்டப் பணத்தை அதிகரித்தல்.

9. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.

- 2014இன் 1ஆம் இலக்க ஆழ் கடல் கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதிகள் (திருத்திய)
- மீன் பகிர்ந்தளித்தல் மற்றும் மீன் பதப்படுத்தும் ஒழுங்குவிதிகள்.
- மீனவ சங்கங்களின் உபவிதி மேற்கொள்ளல்.

10. பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

கடற்றொழில் (கட்டணம் விதித்தல்) ஒழுங்குவிதிகள்

11. கடல் உணவு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்

- அலங்கார மீன் ஏற்றுமதி - 1557
- முத்துச் சிப்பி ஏற்றுமதி - 45
- கடலட்டை ஏற்றுமதி - 142
- கடல் உணவு ஏற்றுமதிக்கு விதிகள் மற்றும் சான்றிதழ் - 41,163
- மீன் பிடிப்பதற்கான சான்றிதழ் - 28805
- மீன் உற்பத்திகளை பதப்படுத்தும் நிறுவனங்கள் பதிவு செய்தல்- 50
- மீன் உற்பத்திகளை கையாளும் நிறுவனங்களை பதிவு செய்தல்- 14

12. **தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம்**

- 6,000 வரையான கடற்றொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை 100% திணைக்களத்தின் வளங்களைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ளது.

- இலங்கையில் சிறந்த இணையதளத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான Bestweb.lk போட்டியில் திணைக்களத்தின் இணைய தளத்துக்கு சிங்கள இணையதள பிரிவில் முதலிடத்திலும் அரச இணைய பிரிவில் விசேட விருதினையும் பெற முடிந்தது.

- இணையதள மென்பொருளைப் (MSDFAR) பயன்படுத்தி அரச கடமைகள் சிறந்த முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதன் மூலம் தற்போது வெற்றிகரமாக 45265 கடற்றொழிலாளர்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (Fishermen Registration), 166 வள்ளச்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. (Yard Registration) 1535 படகு திட்டமிடலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (Boat Desing), 6950 படகுகளுக்கு பதிவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. (Boat Number Registration), 4590 படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.(Boat Registration), 4485 படகுகளின் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. (Boat Renewal), 5520 செயற்பாட்டு நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. (Oparation license), 1600 விஞ்ஞான ரீதியான தரவு உள்ளடக்கல் (Scientific Data), 779 படகோட்டிகள் பதிவு செய்துள்ளனர். (Skipper license), 05 மீன் பிடிப்பதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.(Catch Certificate) .

- திணைக்களத்துக்கு 40 வரையான புதிய கணணி திறந்த அலகு (Open Source) செயற்பாட்டு நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

13. வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுவித்து இந்நாட்டுக்கு கொண்டு வருதல்

கைது செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை	தடுத்து வைக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை
156	113	24	18

14. தேசிய, சர்வதேச மற்றும் வெளிநாடுகளுக்குரிய கடற் பரப்பில் பழதாகி மிதந்து சென்ற படகுகளைக் காப்பாற்றுதல்

மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை	மீட்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை	கைவிடப்பட்ட படகுகளின் எண்ணிக்கை
303	63	07

15 **ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளின் தகவல்களை உறுதிப்படுத்தல்**

1.	ஆழ்கடலில் நடவடிக்கைகளுக்குரிய அலகிலிருந்து கிடைத்த லொக் பிரதிகளின் எண்ணிக்கை	2157
2.	நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கை எண்ணிக்கை	2157
3.	தரவுக் குறிப்பு களஞ்சியத்தில் உள்ளடக்கப்பட்ட தரவு பிரதிகளின் எண்ணிக்கை	41076

16. தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சேவை வழங்கல்

1	நிகழ்நிலை முறையில் படகுகளுக்கு பயண நேரம் வழங்கல்.	61451
2	AIS உபகரணங்களை முறையாகப் பதிவு செய்தல்	8790
3	IOTC தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் படகு புகைப்பட தரவு பதிவுகளின் எண்ணிக்கை	3072

17. **கடற்றொழிலாளர்களின் (கடற்றொழில் படகு) பாதுகாப்பை உறுதிப்படுத்தல்**

- காப்பீடு செய்யப்பட்ட சகல கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை - 21058 (3 காலாண்டுக்குரியது)
- காப்பீடு செய்யப்பட்ட சகல கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை - 33269 (3 காலாண்டுக்குரியது)
- மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை - 388 (3 காலாண்டுக்குரியது)
- கடலோட்டு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை- 17829 (3 காலாண்டுக்குரியது)

இயற்கை பேரிடர்களுக்கான இழப்பீடு வழங்கல்

இந்த வேலைத் திட்டம் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் திட்டமாகும். இது சம்பந்தமாக பயனாளிகளிடமிருந்து ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படுகின்றது. இதன் கீழ் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கையில் இயற்கை பேரிடர் காரணமாக இறக்கும் மீனவர்களுக்காக அவர்களின் இரத்த உறவினர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா காப்புறுதியாக வழங்கப்படுகிறது. இதற்கமைய 2021ஆம் ஆண்டுக்குள் 6 பயனாளிகளின் குடும்பத்தினர்களுக்கு காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் பாதுகாப்பு காப்புறுதி

2019ஆம் ஆண்டில் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தை தொடர்புடுத்தி தனியார் காப்புறுதி கம்பனியுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் வருடாந்த கட்டணம் ரூபா 1,348.00 ஆகும். இதன் மூலம் மீனவர்கள் திடீரென மரணமடைந்தால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூபா ஒரு மில்லியனும், இயற்கை மரணத்துக்கு ரூபா 250,000.00வும் காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. தற்போது காப்புறுதி திட்டத்தில் ரூபா 450 பயனாளிகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

கரையோர கடற் பரப்பில் மீன்களின் குடித் தொகையை அதிகரிப்பதற்கு பயன்படுத்தி அகற்றப்பட்ட வாகனதொகுதிகளைப் பயன்படுத்தி அணி தயாரித்தல்.

2021ஆம் ஆண்டளவில் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் கீழ் கரையோரக் கடற் பரப்பின் தொகுதியை மேம்படுத்துவதற்கு ரூபா 10 மில்லியனும், கடற்றொழில் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் கரையோரப் பிரதேசங்களில் மீன்களின் குடித் தொகையை அதிகரிப்பதற்கான வாழிடத்தை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 20.2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இந்த செயற்றிட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூபா 30.2 மில்லியனாகும்.

கரையோர கடற் பரப்பில் மீன்களின் குடித்தொகையை அதிகரிப்பதற்கான நோக்குடன் பயன்படுத்தி அகற்றப்பட்ட சிதைவடைந்த கடற்றொழில் படகுகளைப் பயன்படுத்தி கரையோரக் கடலில் செயற்கை அடி மூலக் கூறுகளை ஏற்படுத்தும் செயற்றிட்டம் காலி, மாத்தறை நில்வெல்ல மற்றும் யாழ்ப்பாண பிரதேசங்களில் கரையோரக் கடலில் 2021ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலி பிரதேசத்தில் செயற்படுத்திய செயற்றிட்டத்துக்கு 24 பஸ் வண்டிகளும், இரண்டாவது கட்டமாக மாத்தறை நில்வெல்லயில் கடல்சார் அருங்காட்சியகம் ஒன்று கடற்படையினரால் ஒருங்கிணைந்த செயற்றிட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கு திணைக்களத்தினால் ஒரு பஸ் வண்டியும், மூன்றாவது கட்டமாக யாழ்ப்பாண கரைதீவு சார்ந்து 38 பஸ் வணடிகளும் பயன்படுத்தி இந்நவடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பஸ் வண்டிகளின் பெறுமதிக்கான விலை, போக்குவரத்து அமைச்சின் குழுவின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட பஸ் வண்டி தரையிறக்கும் போக்குவரத்துக்குமான செலவும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளதுடன், முன்னைய மதிப்பீட்டுக்கு அமைய கொண்டு செல்ல முடியாதுள்ளதுடன் செயற்றிட்ட தளத்துக்கு உள்ளீடுகளை கொண்டு செல்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட விலையின் கீழ் சசுர அகழ்வு படகுக்கு செலுத்தும் பற்றுச் சீட்டுக்குரிய செயற்பாடு நிறைவடைந்த பின் எடுக்கும் காலத்துக்கு அமைய மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய எமக்கு கிடைத்த சகல செலவினதும் பற்றுச் சீட்டின் பெறுமதி ரூபா 29,398,906 ஆகும். 2021ஆம் ஆண்டில் இதில் ரூபா 29.39 மில்லியன் பெறுமதி கொண்ட பற்றுச்சீட்டுக்கள் திணைக்களம் மற்றும் அமைச்சின் ஒதுக்கீட்டில் நிரப்பப்பட்டது.

18. கருவாடு உற்பத்தி தொழிலில் ஈடுபடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு, உற்பத்திக்குத் தேவையான தரமான உபகரணங்கள் வழங்கும் முன்னோடி செயற்றிட்டம்.

2021இல் அமைச்சின் மீனவ சமூகத்தினரை வலுப்படுத்தும் செலவுத் தலைப்பின் கீழ், மீனவ மகளிர் சங்கத்தை வலுப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 4 மில்லியன், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் முன்னோடி செயற்றிட்டமாக கருவாடு உற்பத்தியில் ஈடுபடும் பெண்களுக்குத் தேவையான உபகரணத் தொகுதிகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லாமையால் சமுத்திர பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்தி இந்த இளைஞர் யுவதிகளுக்கு கடற்றொழில் நடவடிக்கை சம்பந்தமான தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி வேலைத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஒதுக்கிடப்பட்டிருந்த ரூபா 8 மில்லியன் மூலம், ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகை இச்செயற்றிட்டத்துக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்துக்கு கிடைத்துள்ள தொகை ரூபா 6.5 மில்லியனாகும்.

இதற்கமைய பின்வரும் உபகரணத் தொகுதிகள் வீதம் செயற்றிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைக்கு அமைய வழங்குவதற்கு, மாவட்டங்களின் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

உபகரணம்	**பயனாளிகள்**
சீ நோர் நிறுவனத்தின் உற்பத்தியான கருவாடு காய வைக்கும் மேசை	யாழ்ப்பாணம் 30
பிளாஸ்டிக் பெரல் 1 (250 லிற்)	மன்னார் 10
கத்திகள் 2	நீர்கொழும்பு 10
நீளம் 8 – பிளேட் 5" அகலம் 2" நீளம் 3" நீளம் 10 – பிளேட் 6" அகலம் 3" நீளம் 4"	மாத்தறை 20

இதற்கமைய மேற்குறிப்பிடப்பட்ட உபகரணங்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

19. மீன் அறுவடையின் பின்னர் ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கல்.

தற்போது இலங்கையில் மீன் உற்பத்திகள் அனைத்து துறைகளினாலும் தேசிய சந்தைக்கு 70% பங்களிப்பும், ஏற்றுமதி சந்தைக்கு 7% பங்களிப்பும் வழங்குகின்றது. முறையான பதப்படுத்தும் முறையைக் கடைப்பிடிக்காமை காரணமாக மீன் உற்பத்தி அண்ணளவாக 20% -30%மாக வீழ்ச்சி கண்டுள்ளது. அத்துடன் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பும் கணக்கிடப்பட்டுள்ளது. அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் சேதத்தைக் குறைத்து அவற்றின் சிறந்த குணப் பண்புகள் பற்றியும் அறிவுறுத்தல் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு ரூபா 8 மில்லியன் ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ரூபா 0.5 மில்லியனும், சமுத்திர பல்கலைக் கழகத்தைப் பயன்படுத்தி இளைஞர் யுவதிகளுக்கு கடற்றொழில் நடவடிக்கை சம்பந்தமான தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு ரூபா 8 மில்லியனும் ஒதுக்கிடப்பட்டுள்ளது., அத்துடன் ரூபா 1 மில்லியன் செயற்பாடற்ற 300 மீனவ கூட்டுறவு சங்கங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் ரூபா 6 மில்லியன் நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய செயற்றிட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த அளவு ரூபா 9.5 மில்லியனாகும்.

இதற்கமைய, மீன் அடுக்கும் பெட்டிகளின் பெறுமதியில் 25% சமூகப் பங்களிப்பாக வழங்குவதன் கீழ் இதற்காக பெற்றுக் கொள்ளக்கூடிய அதிக பட்ச பெட்டிகளை கொள்முதல் செய்வதற்கும், சம்பந்தப்பட்ட திட்டத்திலுள்ள c/ppr (14) 2016அமைச்சரவை மசோதாவுக்கு அமைய ம/ப சீ நோர் நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. எனினும் ஏனைய மூலப் பொருட்கள் பெற்றுக் கொள்வதில் சிரமத்தின் காரணமாக ம/ப சீ நோர் நிறுவனத்தினால் 49 மீன் அடுக்கும் பெட்டிகள் மட்டும் 2021ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் இதில் முதலாவது தொகுதி 25% சமூகப் பங்களிப்பாளரான 49 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

20. கரையோர கடல் மீன் நிலங்களுக்கு FAD பொருத்துதல்

கரையோரக் கடலில் மீன் தொகையை அதிகரிப்பதற்கு கொங்கிறீட் மூலம் தயாரிக்கப்பட்ட செயற்கை கட்டமைப்புகளைப் பயன்படுத்தி மீன் திரட்டும் சாதனத்தை உருவாக்கும் திட்டத்துக்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கிடப்பட்டுள்ளதுடன், இதற்கு கொள்முதல் செய்யும் வழிமுறை கோவைக்கு அமைய கொள்முதல் மேற்கொள்வதற்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு 2021.12.10ஆந் திகதி கேள்விமனு வழங்கப்பட்டதுடன் 14 நாட்களுக்குள் இதற்கான பணியை ஆரம்பிப்பதாகவும் அறியத் தரப்பட்டது.

21. கடனீரேரிமீன் எண்ணிக்கையை அதிகரித்தல்.

ஒதுக்கப்பட்ட நிதியில் ரூபா 2.2 மில்லியன் செலவிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொண்டமனாறு கடனீரேரியில் கரஅடு இறால் குஞ்சுகள் 04 மில்லியனும், ரூபா 0.825 மில்லியன் ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு கடனீரேரயில் கரஅடு இறால் குஞ்சுகள் 01.5 மில்லியனும் வைப்பிடப்பட்டது. தற்போது தொண்டமனாறு கடனீரேரியில் 465 பயனாளிகளும் மட்டக்களப்பு கடனீரேரியில் 500 பயனாளிகளும் இனம் காணப்பட்டுள்ளனர்.

22. மோதா மீன் செய்கை

புத்தளம் கடனீரேரியில் மோதா மீன்கள் கூடுகளில் வளர்ப்பதற்காக 27,500 மோதா மீன் குஞ்சுகள் வைப்பிடப்பட்டுள்ளது.

23. கடனீரேரி அபிவிருத்தி

கடனீரேரியின் எல்லை நிர்ணயித்தல்

கடனீரேரியின் எல்லை நிர்ணயிப்பதற்கு ரூபா 11 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அறுகம்பே, லங்கா பட்டுண, சிலாபம், புத்தளம், ரெக்காவ, கொக்கிளாய் ஆகிய கடனீரேரிகளில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் 5288 எல்லைத் தூண்கள் நடப்பட்டுள்ளது.

- **கடனீரேரி சுத்தம் செய்தல் மற்றும் ஆழப்படுத்தல்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக் கடல் கடனீரேரியில் கடற்றொழில் கைத்தொழில் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கை சம்பந்தமாக, தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் அடிப்படை சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது தொழில்நுட்பக் குழுவின் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நாயாறு கடனீரேரியில் மீன்பிடிக் கைத்தொழில் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கை சம்பந்தமான அறிக்கை தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- **கடனீரேரி அபிவிருத்தி**

கொக்கிளாய் கடனீரேரயில் 15 கடனீரேரி அபிவிருத்தி குழுக்கள் மறுசீரமைகப்பட்டுள்ளது.

24 அடிப்படை வசதிகளுக்கான அபிவிருத்தி

யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 31 செயற்றிட்டங்களுக்கு ரூபா 29.98 நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

2.2 சவால்கள்

1. சகல அலுவலர்களுக்கும் நிலையான இணையதள வசதிகள் வழங்க இயலாமை.
2. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் சில அலுவலர்களின் பின்தங்கிய நிலை.
3. அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட இயந்திரங்கள் கணிசமான அளவு சரியாக இயங்கவில்லை.
4. இக்காலப் பகுதயில் ஏற்பட்டிருந்த கொரேனா நிலை காரணமாக அலுவலர்கள் தங்கள் பணிகளை முறையாக மேற்கொள்ள முடியாமை.

2.3. எதிர்கால இலக்கு

1. திணைக்களத்தின் பணிக் குழுவினர்களுக்கு செயற்பாட்டு தொகுதி அறிமுகப்படுத்தல்.
2. திணைக்களத்தின் பணிக் குழுவினர்களுக்கு அடிப்படை கணிணி அறிவை வழங்குதல்.
3. 15,000 மீனவர்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குதல்.
4. 10,000 பயண நேரங்களுக்காக மீனவர்களுக்கு ஈ-லொக் முறைமை செயற்படுத்தல்.
5. தரவு மீளாய்வுக்காக குறியீட்டு மொழி அறிமுகப்படுத்தல்.
6. பொருட்கையிருப்பு முகாமைத்துவ தொகுதி அறிமுகப்படுத்தல்.

3ஆம் அத்தியாயம் -

2021 திசம்பர் 31இன் இறுதி வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்று கூற்று

2021 திசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வரவுசெலவு 2021(ரூபா)			உண்மை நிலை 2021	2020	
-	**வருமானப் பெறுகைகள்**		64,606,538	43,562,801	
-	வருமான வரி		-	-	
52,000,000.00	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	64,606,538	43,562,801	ஏசீஏ
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
52,000,000.00	**மொத்த வருமானப் பெறுகைகள்(அ)**		**64,606,538**	**43,562,801**	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		573,350,000	730,183,000	ஏசீஏ
-	வைப்புகள்		90,955,567	41,355,220	ஏசீஏ
-	முற்பணக் கணக்குகள்		25,827,415	22,264,578	ஏசீஏ-5,
-	ஏனைய பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**690,132,982**	**793,802,798**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ)+(ஆ)**		**754,739,520**	**837,365,599**	
	திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)		**-**	**-**	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உரீ(இ)-(ஈ)		**754,739,520**	**837,365,599**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		**-**	**-**	
481,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	478,469,247	439,220,420	
102,200,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	6	125,584,942	96,206,556	
68,500,000		7	89,164,831	209,906,037	ஏசீஏ-
-	ஏனைய மீண்டுவரும் செலவினம் மானியம், கொடை மற்றும் மாற்றல்கள்	8	-	-	
800,000	வட்டிக் கொடுப்பனவுகள்	9	291,865	-	
653,000,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்		**693,510,884**	**745,333,013**	

58,000,000	முலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	19,038,819	11,697,941	
28,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	16,574,347	17,152,913	**ஏசீஏ-** 2(ii)
-	மூலதன மாற்றல்கள்	**12**	-	24,215,000	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
1,500,000	மனித வள அபிவிருத்தி	**14**	1,008,204	966,535	
19,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	9,464,704	18,466,230	
107,000,000	**மொத்த மூலதனம் செலவினம் (உ)**		**46,086,075**	**72,498,619**	
	வைப்புகள்		50,840,892	35,244,629	**ஏசீஏ**- 4
	முற்பணக் கணக்குகள்		17,319,666	15,802,039	**ஏசீஏ** 5
	பிற பிறதான லெஜர் கணக்கு செலுத்தல்				
	பிற பிறதான லெஜர் கணக்கு செலுத்தல்				
	மொத்த செலவினம		**68,160,558**	**51,046,668**	
	மொத்த செலவினம் எ =(ஈ+உ+ஊ)		**807,757,517**	**868,878,300**	
	2021 திசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)		**(53,017,997)**	**(31,512,701)**	
	பணிமுற்பண ஒப்பீட்டுக்கு அமைய மீதி		53,017,997	-	**ஏசீஏ**7
-	**திசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		(0)	-	**ஏசீஏ**

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

குறிப்பு		உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	1,069,868,735	778,299,720
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5(ஏ)	74,868,092	83,375,840
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**1,144,736,827**	**861,675,560**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		(19,601,070)	29,021,354
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,069,868,735	778,299,720
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ-5(பி)	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	94,469,162	54,354,486
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		1,144,736,827	861,675,560

பக்க இலக்கம் 06 முதல் 38 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 39 முதல் 51.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 23/02/22

R.M.I. Rathnayake
Secretary
Ministry of Fisheries
2nd Floor, New Secretariat Building,
Maligawatta, Colombo 10.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

Susantha Kahawatta
Director General
Department of Fisheries & Aquatic Resources

பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நி
பெயர் :
திகதி : 2022/02/22

A. G. M. Dilhani
Chief Accountant
Department of Fisheries & Aquatic Resources
Maligawatta - Colombo 10.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறானகாசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2021	**2020**
	ரூபா	**ரூபா**
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகைகள்	64,606,538	43,562,801
கட்டணங்கள், தண்டப்பணங்கள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	2,278,945
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	56,924,943	39,677,867
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	573,350,000	730,183,000
முற்பணங்களை அறவிடல்	22,477,692	16,985,553
வைப்புக்களின் பெறுகை	90,955,567	41,355,220
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**808,314,740**	**874,043,387**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	591,115,241	528,024,503
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	82,229,303	209,272,800
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	35,221,114	14,206,784
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	2,278,945
முற்பணக் கொடுப்பனவு	12,809,200	10,319,377
வைப்புக் கொடுப்பனவு	50,840,892	35,244,629
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**772,215,751**	**799,347,038**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	36,098,989	74,696,349
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	36,098,989	74,696,349
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**36,098,989**	**74,696,349**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(36,098,989)	(74,696,349)

தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**(0)**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீள் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	(0	-
	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி		
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4.நிதிக் கூற்றுக் குறிப்பு

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந்நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதே வேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத் தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

ரூபா.000

3.6. வருமானம் சேகரித்த செயலாற்றுகை

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பின் விபரம்	வருமான மதிப்பீடு		வருமானத்தைத் திரட்டுதல்	
		மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	அளவு (ரூபா)	மூல மதிப்பீடு
